*கவனிக்க .- 16.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1864 - 2014 මැයි මස 23 වැනි සිකුරාදා - 2014.05.23

*1864 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 684 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 686 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


*__கவனிக்க.__- இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2013, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகிறது.*

*சங்கமித்தா சுத்தாக்கர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, மே 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, யூன் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மே மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## அக்மீமன பிரதேச சபை

அக்மீமன பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள முதனிலை கைவினைஞர் அல்லாத பதவிக்காக தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கு இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளையுடைய தென் மாகாண சபை எல்லைக்குள் நிரந்தர வதிவாளரிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடமான பதவிகளும் அது சம்பந்தமான விபரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

| இலக்கம் | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவுத்திட்டம் | ஆட்சேர்ப்புக்கான ஆக குறைந்த தகைமை |
|---|---|---|---|---|
| 1 | சூவலை/ கள் தொழிலாளர் | 01 | (PL 1 - 2006A) ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | 8ம் வகுப்பு (9ம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |
| 2 | சுகாதார தொழிலாளர் | 06 | (PL 1 - 2006A) ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | 8ம் வகுப்பு (9ம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |
| 3 | பிணம் சுடும் இல்ல உதவியாளர் | 01 | (PL 1 - 2006A) ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | கல்வி பொது தராதர (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தோற்றி கணிதம் உட்பட அதிக பட்சம் இரண்டு திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் |

**2. ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை - பொது தகைமைகள் :**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் ;
(ii) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் அண்மித்த மூன்று வருட காலங்கள் தென் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராய் இருத்தல் வேண்டும் ;
(iv) விண்ணப்பதாரர் நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நன்னடதையும் ஒழுக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;
(v) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் உயர் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டனை அனுபவித்தவர் அல்லாதவராக இருத்தல் வேண்டும் ;
(vi) அக்மீமன பிரதேச சபையில் தற்போது நிரந்தர/அமய/தற்காலிக/மாற்று/ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்யும் பணியாளர் சம்பந்தமாக அதிக கவனம் காட்டப்படும்.
(vii) விண்ணப்பதாரருக்கு குறிப்பிட்ட பதவிக்காக குறிப்பிடப்பட்டுள்ள தகுதி இருத்தல் வேண்டும் ;
(viii) அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் நிராகரிக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

(i) இப்பதவி அனைத்தும் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;
(ii) நியமனம் பெறுநர் விதவைகள், அநாதைகள், தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும் ;
(iii) நியமனம் மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும் ;
(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒழுங்கு விதிகளுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும் தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபையில் அல்லது தென் மாகாண அரச சேவை ஆணைக்குழு சபையால் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படும் திணைக்களச் சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் முரண்பாடற்றதாக சேவை செய்வதற்கு கட்டுப்பட வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு முறைகள் :**

(1) விண்ணப்பதாரர் ஒழுங்கு முறையில் அமைந்த நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார் ;

(2) விண்ணப்பப் பத்திரத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களை நேர்முக பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்:-

(i) ஆள் அடையாள அட்டை ;
(ii) பிறப்பு சான்றிதழ் ;
(iii) கல்விச் சான்றிதழ் ;
(iv) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (வதியும் நிர்வாக பகுதி கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட சான்றிதழை உரிய பிரதேச செயலாளரின் அங்கீகார ஒப்பத்துடன் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரது சான்றிதழ்) ;
(v) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சாட்சிப் பத்திரம் ;
(vi) தொழில் அல்லது அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்.

5. தகைமைகள் பூரணப்படுத்தியிருக்கும் விண்ணப்பதாரர் ஒழுங்குமுறையில் அமைந்த நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

6. **விண்ணப்பப் பத்திரம் அனுப்பவேண்டிய முறை**.- விண்ணப்பதாரர் இதில் காட்டப்பட்டுள்ள மாதிரிவிண்ணப்பப் படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்தில் விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையில் இடது பக்க மூலையில் தெளிவாக குறிப்பிட்டு 2014.06.16 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்குமாறு "செயலாளர், அக்மீமன பிரதேச சபை" பின்னதூவ, வலஹந்துவ எனும் விலாசத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர் தமது திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின் தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும், முறையா பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். (விண்ணப்ப பத்திரத்தை A4 அளவு தாளில் தயாரிக்கப்படல் வேண்டும்.)

7. விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொண்டதன் பின் அல்லது கோரும் காலப்பகுதியில் ஆட்சேர்ப்பை தாமதித்தல் அல்லது வித்தியாசப்படுத்தல் அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தி அமைத்தல் போன்றவற்றுக்கான அதிகாரம் அக்மீமன பிரதேச சபை தலைவருக்கு உரியது.

தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்மீமன,
2014, ஏப்பிறல் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அக்மீமன பிரதேச சபை**

........................................................................ பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் முதலெழுத்துகளுடன் பெயர் :----.
முதலெழுத்துகளினால் குறிக்கும் பெயர் :----.
2. தற்போதைய முகவரி :----.
3. நிரந்தரமாக வதியும் மாவட்டம் :----.
4. பிறந்த திகதி :- வருடம் :----, மாதம் :----, திகதி :----.
5. விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கும் திகதியன்று வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
6. விவாவகமானவர்/விவாகமாகாதவர் :----.
7. ஆண்/பெண் :----.
8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
9. நீர் இலங்கைப் பிரசையா? அப்படியாக இருப்பின் பரம்பரை இலங்கை பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்டதன் மூலமா? என்பது பற்றி :----.
10. கல்வித் தகைமை :----.
11. தொழில் தகைமை :----.
12. நீர் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் இருப்பவராயின் :----.
(i) தற்போது வகிக்கும் பதவி :----.
(ii) அந்த நியமன கடிதத்தின் தன்மை நிரந்தர/அமய/தற்காலிக/மாற்று/ஒப்பந்த அடிப்படையில் :----.
(iii) அந்த பதவி கிடைத்த திகதி :----.
13. நீர் குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் உயர் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டனை அனுபவித்தவரா? :----.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் விசுவாசத்துக்கும் இணங்க உண்மையானதென்பதை வெளிப்படுத்துகின்றேன். நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தகுதியின்மை பற்றிக் கண்டறியப்படுமாயின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நன்கறிவேன். மேலே குறிப்பிட்ட எத்தகவலிலும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**தற்போது அரச, மாகாண அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரருக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ............................................ ஆகிய இந்த திணைக்களத்தில் .............................. ஆக சேவையில் இருக்கின்றார். இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியவில்லை. அவர் எந்த விதத்திலும் தண்டனைக்கு உள்ளானவர் அல்ல என்று இதன் மூலம் அத்தாட்சி செய்கின்றேன். அவரால் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

5-592

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ரம்புக்கனைப் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2014.02.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட பிரேரணைக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப வேண்டும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கின்றேன்.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2014, மாச்சு 26.

| | நீளம் | அகலம் |
|---|---|---|
| வீதியின் விபரம் | 174 மீற்றர் (570'.0") | 2.75 மீற்றர் (9'.0" மீற்றர்) |

கிராம அலுவலர் பிரிவு - குடாகம (தெற்கு)
வீதியின் பெயர் - கோன்கஹவத்த வீதி

தொம்பேமட குருநாகல் வீதியில் குடாகமவில் ஆரம்பித்து இடப்பக்கமாக ஆர். வில்பட் ஜயவிக்கிரம என்பவருக்குச் சொந்தமான முத்தெட்டுவே கும்புர, எஸ். ஏ. விஜேசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான முதுவகே கும்புர, எம். சுமனசிறி ராஜபக்ஷ, ஆர். ரத்னாயக, என்பவர்களுக்குச் சொந்தமான முத்தெட்டுவே காணி, ஆர். பாலித உதய குமார, ஆர். அஜித் சமிந்த குமார என்பவர்களுக்குச் சொந்தமான உடஹவத்த எனும் காணிகளில் எல்லையாவதும்,

வலப்பக்கமாக ஆர். சீலவதீ மற்றும் எம். செனவிரத்தின என்பவர்களுக்குச் சொந்தமான முத்தெட்டுவே வயலில் எல்லையாவதுமான கோன்கஹவத்த வீதி.

| | நீளம் | அகலம் |
|---|---|---|
| வீதியின் விபரம் | 133 மீற்றர் | 2.70 மீற்றர் |

கிராம அலுவலர் பிரிவு - இம்புல்கஸ்தெனிய
வீதியின் பெயர் - இம்புல்கஸ்தெனிய தோட்டத்திற்குச் செல்கின்ற துணை வீதி

ஹிரிவடுன்ன அந்திரமட வீதியில் இம்புல்கஸ்தெனியவில் ஆரம்பித்து வலப்பக்கமாக ஜீ. ஏ. ஆர். கே. ஜீவானந்த என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 03 மற்றும் 04) காணித்துண்டுகளும், திலக் ஜயசிங்ஹ பண்டார என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 05) காணித்துண்டு, கே. பீ. எம். ஸீ. ஜயசேகர என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 06) காணித்துண்டு, சீதா மங்கலிகா குணரத்தின என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 07 மற்றும் 08) காணித்துண்டுகளும், பீ. எச். எம். நந்தாவதீ மெணிகே என்பவருக்குச் சொந்தமான (இலக்கம் 09) காணித்துண்டும், எச். சமரதுங்க மற்றும் பீ. வீ. சான்தா பியசீலி மெணிகே என்பவர்களுக்குச் சொந்தமான (இலக்கம் 10 மற்றும் 11) காணித்துண்டுகளில் எல்லையாவதும்,

இடப்பக்கமாக பீ. கே. சந்திம பிரியன்த என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 20) காணித்துண்டும் எச். சிறிசேன என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 18, 19) காணித்துண்டும், ஏ. கே. பொடிமஹத்தயா என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 16, 17) காணித்துண்டுகளிலும் எல். பி. சந்திரசேன த சில்வா என்பவருக்குச் சொந்தமான (துண்டு இலக்கம் 14 மற்றும் 15) காணித்துண்டுகளால் எல்லையாவதுமான இம்புல்கஸ்தெனிய தோட்டத்திற்குச் செல்கின்ற துணை வீதி.

| | நீளம் | அகலம் |
|---|---|---|
| வீதியின் விபரம் | 800 மீற்றர் | 2.4 மீற்றர் |

கிராம அலுவலர் பிரிவு - கங்கொட கிராம அலுவலர் பிரிவு
வீதியின் பெயர் - கங்கொட மெகொட சமகி மாவத்த

ரம்புக்கனை மாவனல்லை பிரதான வீதியில் ஆரம்பித்து இடப்பக்கமாக கே. ஜீ. திலக் சேனாதீர என்பவருக்குச் சொந்தமான வெலி கும்புர, கே. பீ. மேரி என்பவருக்குச் சொந்தமான மெதவத்த காணியும், ஜீ. மெகலின் என்பவருக்குச் சொந்தமான ஹிட்டினாவத்த எனும் காணிகளில் எல்லையாவதும்,

வலப்பக்கமாக ஆர். காமிணீ விஜேரத்தின என்பவருக்குச் சொந்தமான தெனிய காணியும், எச். பீ. ஆர். பீ. குமார என்பவருக்குச் சொந்தமான உடுமுல்ல காணியும், எம். பீ. எஸ். பீ. அபேரத்தின மற்றும் எம். பீ. அபேரத்தின என்பவர்களுக்குச் சொந்தமான ஹிட்டினாவத்த காணியும், டி. பீ. சீலவதீ மற்றும் கே. எம். புஞ்சி பண்டா என்பவர்களுக்குச் சொந்தமான கனதரவத்த எனும் காணிகளில் எல்லையாவதுமான கங்கொட கிராம மத்தியில் உள்ள வீதியில் முடிவுருகின்ற கங்கொட மெகொட சமகி மாவத்த.

05-669/1

---

## ரம்புக்கனை பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2013.12.30 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட பிரேரணைக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து முதல் 30 நாட்களுக்குள்

எனக்கு அனுப்ப அதிகாரம் இருப்பதாகவும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படும்.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2014, பெப்புருவரி 05.

| | நீளம் | அகலம் |
|---|---|---|
| வீதியின் விபரம் | 300'.0" | 8'.0" |

கிராம அலுவலர் பிரிவு - மெதகலதெனிய
வீதியின் பெயர் - பல்லேகலதெனிய தெஹிகஹமுலஹேன ஊடாக ருக்அத்தனகஹமுல தோட்ட வீதி

வில்சன் அபேசேன என்பவருக்குச் சொந்தமான ருக்அத்தனலஹமுல தோட்டத்தில் ஆரம்பித்து இடப்பக்கமாக என். பிரேமலால் அனுரதிலக, என். அஜித்குமார என்பவர்களுக்கு உரித்தான தெஹிகஹமுல ஹேன காணியில் எல்லையாவதும்,

வலப்பக்கமாக என். வில்சன் அபேசேன, என். பீ. ரேணுகா, டபிள்யு. சாலிய பண்டார என்பவர்களுக்குச் சொந்தமான ருக்அத்தனகஹமுலஹேன காணியில் எல்லையாவதுமான தெஹிகஹமுலஹேன ஊடாக ருக்அத்தனகஹமுல தோட்ட வீதி.

05-669/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.